ORIGINAL ARTICLE

# ராவணனின் ஆட்சியும் இலங்கையின் மாட்சியும் - ஓர் ஆய்வு
# [RĀVAṆAṈIṈ ĀṬCIYUM ILAṄKAIYIṈ MĀṬCIYUM - ŌR ĀYVU]

# THE ROYAL RULE OF RAVANA AND THE MAJESTY OF ILANGGAI - A RESEARCH

**ராஜேஸ்வரி கோபால் *[1] / Rajeswari Gopal *[1]**
**லாவண்யா செல்வம் [2] / Lavania Selvam [2]**
**ஆ.சதீஷ் குமார் [3] / A.Sathish Kumar [3]**

[1] SMK Serendah, Serendah, Selangor, Malaysia. Email: g-28338634@moe-dl.edu.my
[2] Tadika Pelita Intelek, Bestari Jaya, Selangor, Malaysia. Email: lavania5766@gmail.com
[3] Doctoral Candidate, International Institute of Tamil Studies, Chennai, India. Email: asathishpvr10@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/149

**Abstract**

A person who embodied with 64 Celestial Degrees; Lord Shiva's devotee, King of Ilanggai; and he is widely remembered as a demon king with ten heads. According to Hindu mythology, Ravana was introduced by Kambar in his mythological novel Ramayana. In Ramayana, Ravana was widely considered to be a symbol of evil and described as an antagonist of the novel as he abducted Rama's wife Sita. Meanwhile, as Ravana is widely depicted as an evil incarnate, what's not so well known by many is that he was also endowed with several positive qualities. Hence, this journal/article is aimed to describe Ravan's good qualities that he showed throughout his legacy.

**Keywords:** Ravana, Ilanggai, Rule, Ravaneswaran, Ilanggai, Emperor, King

**ஆய்வுச் சாரம்**

கம்பரின் இராமாயணம் மூலம் அனைவராலும் அறியப்பட்ட இராவணன், இராமனின் மனைவி சீதையைக் கடத்தியதால், இராமனுக்கு நேர் எதிரான பாத்திரத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளான். பின்னர், அதுவே அவன் அழிவிற்கும் அவனின் ஆட்சியின் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்தது மட்டுமே இன்றுவரை அனைவரால் அறியப்பட்ட செய்தியாக இருந்து வருகிறது.

ஆனால், சீதையைச் சிறையெடுப்பதற்கு முன், அவன் எப்படிப்பட்ட அரசனாகத் திகழ்ந்தான் என்பதையே இங்கு நாம் காணவுள்ளோம். இலங்கை மன்னன் பத்துத் தலை இராவணனின் சிறப்புப் பலரால் புகழப்பட்டுள்ளது. ‘இராவணன் மேலது நீறு’ திரிலோக சஞ்சாரியாகிய இராவணன் திருநீற்றைப் பெரிதென மதித்து அணிந்து சிவபெருமானின் அருளைப் பெற்றான் என்கிறார் திருஞானசம்பந்தர். (நாகப்பன், 2008)[1] இப்படியாகத் திருமுறை பாடல்களில் ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாம் பாடலில் ராவணனின் பெயர் இடம்பெற்றுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதன் வழி ராவணன் ஒரு மிகப் பெரிய சிவ பக்தன் என்பதனை நாம் இங்கு அறிய முடிகிறது; இராமாயணத்தில் அரக்கனாகச் சித்தரிக்கப்பட்டுள்ள இலங்கை வேந்தன் ராவணன், 64 கலைகளையும் கற்ற, ஒரு வல்லமை பெற்ற அரசனாக தன் மக்களையும் தன் நாட்டையும் ஆண்டு வந்தான் என்பதை இங்குப் பலரும் அறியாதது வருத்தம் தரும் செய்தியாகவே உள்ளது. மேலும், அவன் ஆட்சியினால் இலங்கை எப்படிப்பட்ட எழில் பொங்கிய ஒரு வளமான நாடாக இருந்தது என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன என்பதையும் யாரும் அறிகிலார். அதனைக் களையும் வண்ணம் இலங்காபுரி மன்னன் இராவணனின் ஆட்சியையும் அக்காலத்தில் இலங்கை நாட்டின் மாட்சியையும் சில சான்றுகளுடன் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கருச்சொற்கள்**: இராவணன், இலங்கை, ஆட்சி, இராவணேஸ்வரன், இலங்கை வேந்தன், மன்னன்.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 25th February 2021, revised 14th March 2021, accepted 12th April 2021

## முன்னுரை

சங்க காலம் முதல் கொண்டே, ஒரு அரசன் இல்லாத நாடு உயிரற்ற உடன் என்றும், நாட்டையும் அதில் வாழும் தன் மக்களையும் நன்முறையில் ஆட்சி செய்து கட்டிக் காப்பது ஒரு அரசனின் மாபெரும் கடமையாகும் என்பதைப் பல புறநானூறு பாடல்கள் எடுத்தியம்பி உள்ளன (பெரியகருப்பன், 2009)[2]. அதனைத் தொடர்ந்து, அரசர்களின் ஆட்சிக்கு ஆளுகை சட்ட நூல் என்று கருதப்படும் பழம்பெரும் நூலான பொய்யாமொழி புலவர் திருவள்ளுவரின் திருக்குறள் நூல் இன்றும் விளங்குகின்றது. அந்த வகையில், இறை மாட்சி எனும் அதிகாரத்தில் அரசன் ஆற்ற வேண்டியக் கடமைகளை அழகாக எடுத்துரைத்துள்ளார் நமது பெரு நாவலர்.

படை குடி கூழ் அமைச்சு நட்பரண ஆறும்
உடையான் அரசருள் ஏறு (குறள் - 821)

எனும் திருக்குறளின் வழி அரசனுக்குத் தேவையான ஆறு முக்கிய அம்சங்களைக் கூறியுள்ளார். வீரம் மிக்க படை, நாட்டுப்பற்று மிக்க மக்கள், எடுக்கக் குறையாத செல்வம், நாட்டின் நலம் அறிந்து செயல்படும் அமைச்சர், துன்பத்தில் உதவும் அண்டை மாநில நட்பு, அழிக்க முடியாத காவல் என்பதே அவையாகும். ஒல்காப்புகழ் தொல்காப்பியர், வள்ளுவர்க்கு அடுத்துப் புலமையுடையவர் என்பது யாவரும் அறிந்ததே ஆகும் (சாலமன் பாப்பையா, 2006)[3].

இப்புலவர் பெருமான் அவர்களும் அரசர்களுக்குரிய பொருட்கள் என்று சிலவற்றை அவர் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

படையும் கொடியும் குடையும் முரசும்
நடை நவில் புரவியும் களிறும் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க்குரிய'

படை, கொடி, குடை, முரசு, புரவி, களிறு, தேர், மாலை, முடி என்பனவை அரசன் கொண்டிருக்க வேண்டிய முக்கியப் பொருளாக இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
திறளி லொருவனை நாட்டி முறை திரிந்து
மெலிகோல் செய்தே னுகுக (புறம் - 71)

அடுத்ததாக அரசர்கள் ஒரு நாட்டை ஆட்சி செய்ய சில தகுதிகளைக் கொண்டிருப்பது அவசியம் என்று புறப்பாடல் இங்கு வலியுறுத்துகிறது. உயர்குடியில் பிறத்தல், நல்லொழுக்கம் உடைமை, அறிவு நுட்பம், இலக்கண இலக்கியப் பயிற்சி, அரசியல் நூல் சார்ந்த புலமை, சூழ்ச்சித் திறன், நெஞ்சுரம், வினைத்திட்பம், குறிப்பறிந்து ஒழுகுதல், நாட்டு மக்கள் மீது அன்பு கொண்டிருத்தல், சொல் வன்மை, தோற்ற பொலிவு, மகப்பேறு, சுற்றும் உடைமை ஆகியவையாகும் (வரதராசன், 2010)[4].

இப்படியாகத் தமிழ் மரபினை எடுத்தியம்பிய இவ்விருவர்களும் கூறியதற்கேற்ப, இலங்கை வேந்தன் வாழ்ந்தான் என்பதைக் கம்பரே நமக்கு எடுத்துரைத்திருக்கின்றார். பல தகுதிகளையும் பலதரப்பட்ட வித்தைகளையும் கொண்டு அரசனாகத் திகழும் இராவணன், பெரும் புகழை எய்தியவன், அவன் தேவர்களுக்கும் மேலாகக் கருதப்படுவது பின்வரும் பாட்டின் வழி தெரிகிறது.

தேவர்என்பவர் யாரும் இத்திரு நகர்க்கு இறைவற்கு
ஏவல் செய்பவர், (கம்பன் - 4844) (கருத்திருமன், 1963)[5]

தேவர்கள் என்று புகழப்படும் அனைவருமே இந்த இலங்கை அரசனுக்குச் சேவை செய்பவர்கள் என்று கூறப்படுவதிலிருந்து இராவணன் எப்படிப்பட்ட அரசன் என்பதைக் கம்பர் நமக்கு எடுத்துரைக்கிறார். இதன் வழி, திருவள்ளுவர் மற்றும் தொல்காப்பியர் கூறிய அரசனுக்கான அனைத்துத் திறன்களையும் தகுதிகளையும் உடையவன் இராவணன் என்பது வெள்ளிடைமலை. அதில் அவனின் படைத்திறன்கள் மற்றும் வீரம் தொடர்ந்து அவன் ஆட்சியில் மக்களின் நிலை போன்றவற்றைக் கம்பரின் பாடல் வரிகளையே சான்றுகளாகக் கொண்டு ஆராய்வுள்ளோம்.

ஓர் அரசர்க்குரிய அங்கங்களுள் தலைசிறந்தது படை என்றும் படைத்திரத்தால் அரசன் உட்பகையை அழிப்பான் என்றும் கூறப்படுகிறது. தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்னும் நாற்படையுடைய அரசன் மிகச் சிறந்தவனாக மதிக்கப் பெற்றான். எல்லாப் படைகளுக்கும் மன்னனே மாபெருந்தலைவன் (சேதுப்பிள்ளை, 2007)[6].

உறுப்புஅமைந்து, ஊறுஅஞ்சா வெல்படை, வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை (குறள் 761)

என்ற குறளில் திருவள்ளுவ பெருமான், நால்வகை படைகளையும் பெற்று, போர்க்களத்தில் புண்பட அஞ்சாது, பகைவரை வெல்லும் படை கொண்ட டொரு அரசன் செல்வத்துள் எல்லாம் சிறந்த செல்வத்தைக் கொண்டுள்ளான் (சாலமன் பாப்பையா, 2006)[3]. இராவனேஸ்வரனும் அவன் தன் படைகளைப் பற்றி கம்பரே பல பாடல் வரிகளில் கூறியுள்ளார். யுத்த காண்டத்தில் வானர படைக்கும் இராவணன் படையினருக்கும் நடந்த போரில் கம்பர் பல இடங்களில் இராவணனின் படையின் ஆளுமையையும் அவர்கள் பயன்படுத்திய சேனைகள் பற்றியும் பாடியுள்ளார்.

மேய சேனை விரி கடல், விண் குலாம் வாயிலூடு புறப்பட்டு வந்ததே (கம்பன் - 7052) என்ற பாடல் வரிகள் வழி, ஆகாயம் போன்ற இலங்கையின் நான்கு வாயில்களிலிருந்தும் போருக்குத் தயாராகி வந்த படைகள் விரிந்து கடல்போல புறப்பட்டு வந்தன என்கிறார் கம்பர். மேலும், இராவனுடைய படை வீரர்கள் பயன்படுத்திய ஆயுதங்களையும்

சூலம், வாள், அயில், தோமரம், சக்கரம்,
வாலம், வாளி, மழையின் வழங்கியே,
ஆலம் அன்ன அரக்கர் அடர்த்தலும் (கம்பர்- 7073)

கவிப்பாடியுள்ளார் கம்பர். கொடிய நஞ்சு போன்ற இராவணன் படையினர், சூலம், வாள், அயில், தோமரம் பிண்டி, பாலம், அம்பு போன்ற பலதரப்பட்ட ஆயுதங்களை மழைபோல பொழிந்து போரிட்டனர் என்பது இங்கு புலப்படுகிறது. அதுமட்டுமின்றி, படைத்தலைவன் இராவணனின் தேரையும், ஆயிரம் குதிரைகள் பூட்டப்பட்ட தேர் என்றும் வர்ணித்துக் பாடியுள்ளார் கம்பர்.

ஆயிரம் பரி பூண்டது (கம்பர்- 7111)

இதன்வழி, இராவணனின் சேனைகள் பிரம்மாண்டமானது என்பதை நாம் அறிய முடிகிறது.

புலி சேர்ந்து போகிய கல் அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க் களத்தானே (புறம் 86)

இந்தப் புறநானூறு பாடல் ஒரு தாய், தன் மகனைப் பற்றிக் கேட்டவர்களுக்குத் தரும் பதிலாக அமைகிறது. புலியின் குகையிலிருந்து பிறந்தது போல பிறந்த என் மகன் கண்டிப்பாகப் போர்க்களத்தில் தான் இருப்பான் என்ற தாயின் வீரத்தை இங்கு நாம் காண முடிகிறது (சேதுப்பிள்ளை, 2007)[5]. ஒரு சாதாரண குடியில் பிறந்த ஒரு பெண்ணின் வீரமே இப்படி இருக்க, ஒரு மன்னன் கண்டிப்பாக நூறு மடங்கு அதிகமான வீரத்தைக் கொண்டிருத்தல் அவசியம் என்பதை நாம் இங்கு உணரமுடிகிறது. அதற்கு, தான் எவ்விதத்திலும் சளைத்தவன் அல்ல என்பது போல வாழ்ந்துள்ளான் இராவணேஸ்வரன்.

புலவர் குழந்தை அவர்களால் படைக்கப்பட்ட இராவண காவியம் எனும் நூலில் இராவணனையே காப்பியத் தலைவனாகப் பாடியுள்ளார்; அவனின் வீரத்தைப் புகழ்ந்துள்ளார்.

‘இராவணின் வீரம் மறம் வளர்க்கும் வீரம்’
(புலவர் குழந்தை, 2001)[7]

இங்கு மறம் என்பது வீரம், வலிமை மற்றும் வெற்றி என்பதைக் குறிக்கின்றது (தேன்தமிழ் சொல் அகராதி, 2015).

இதனைத் தொடர்ந்து,

வாரணம் பெருத மார்பும், வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவற்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவும்
தார் அணி மவுலி பத்தும், சங்கரன் கொடுத்த வாளும் (கம்பர்- 7272)

என்கிறார் கம்பர். எட்டு திசைகளிலும் உள்ள யானைகளுடன் போரிட்டு அதன் தந்தங்களைத் துளைத்த மார்பைக் கொண்டவன் எனவும் கைலாய மலையைத் தூக்கிய பலமிக்க தோள்களையும், சிவபெருமான் இராவாணனின் தவ வலிமையைக் கண்டு கொடுத்த வாளையும் உடையவன் என்றும் பாடுகிறார் கம்பர். அதுமட்டுமின்றி, மன்னர்கள் கொண்டிருக்க வேண்டிய முக்கியத் தகுதிகளையும் பொருட்களையும் கூடக் கொண்டவன் இலங்கை வேந்தன் என்பது இந்தப் பாடல் வழி நாம் அறிய முடிகிறது (செல்லப்பாண்டி, 2020)[8]. மூன்று லோகத்தாரும் அறிந்த, நாரத முனிவரே புகழுமாறு சாமவேதத்தைப் பாடியவன் இராவணன் என்றும் மேலும், தன் பத்து தலைகளிலும் அரசச்சின்னமான மணிமுடி அணிந்தும் காணப்பாட்டன் என்பதை இப்பாடலில் குறிப்பிட்டுள்ளார் கம்பர்.

அவ்வளவு பெரிய கைலாய மலையைத் தன் தோள்களில் தாங்கியவன் தன் கால் விரல்களில் மட்டுமே அதை ஊன்றி நின்றான் என்றும்

தாங்கி இருபது தோளுத் தடவரை
ஓங்க எடுத்தவன் (கம்பன் 4)

இந்தப் பாடல் வரிகள் எடுத்தியம்புகின்றன. ஒரு பெரிய மலையினைத் தூக்கிச் சுமக்கும் அளவிற்கு, இருபது தோள்கள் பலத்தைப் பெற்றவன் என்று இலங்கை வேந்தனின் வீரத்தையும் உடல் வலிமையையும் இங்கு நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்நாள்,
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக்கொடுத்த வரமும் ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும் (கம்பன் -3889)

பத்து தலைகளையும் இருபது கைகளையும் கொண்ட இலங்கை மன்னனான இராவணன், பல அரிய பெரிய தவம் செய்துள்ளான் என்றும், எவராலும் வெல்ல முடியாது என்று இறைவனிடம் வரம் பெற்றவன் என்றும் தெளிவாகிறது. அவன் வலிமையைப் பாடுவதைத் தோடர்ந்து, அவன் ஆன்ம வலிமை பெற்றவன் என்ற கூற்றையும் வெளிப்படுத்தியுள்ளார் கம்பப்பெருமான் (ஞானசம்பந்தன், 2018)[9]. இதன்வழி, இராவணன் ஒரு சிறந்த மன்னனுக்கான எல்லா அம்சங்களைக் கொண்டவனாகச் சித்தரிக்கிறார் கம்பநாடான்.

தென்றிசையைப் பார்க்கின்றேன்;
என்சொல்வேன் என்றன்
சிந்தையெலாம் தோள்களெலாம்
பூரிக்குதடா ! அன்றந்த லங்கையினை
ஆண்ட மறத்தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை
வைத்தோன்குன்றெடுக்கும் பெருந்தோளான் !
கொடைகொடுக்கும் கையான்குள்ளநரிச்!
செயல்செய்யும் கூட்டத்தின் கூற்றம்!
என்தமிழர் மூதாதை!
என்தமிழர் பெருமான்இராவணன்காண்!

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வீரத் தமிழன் எனும் பாடலில் பாடியுள்ளார் (ஞானசம்பந்தன், 2018)[9]. தமிழ்மொழியின் பால் காதல் கொண்டு கவிதைகளை வடித்த இவர், வீரத்தையும் பாடியுள்ளார். அந்த வகையில், இராமணனைக் கண்டுப் பூரித்துப் போவதாக அவர் கவிப்பாடியுள்ளார்.

இவ்வாராக ஒரு சிறந்த வீரனாகவும் பலம் கொண்ட மன்னனாகவும் ஆட்சிபுறிந்த இலங்கேஸ்வரன், அவன் நாட்டையும் அவன் மக்களையும் சிறப்புறவே ஆண்டுவந்தான். அவன் பெருமைக்கும் அவன் சிறப்புக்கும் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அவனின் நாடு விளங்குகிறது. இதனைக் கொண்டே, அதனை ஆட்சி செய்த மன்னன் இராவணனின் செம்மையை 'ஊர் தேடும் படலம் வழி நமக்கு அழகாக எடுத்தியம்பியுள்ளார் (ஞானசம்பந்தன், 2018)[9].

பிணிஇன்மை, செல்வம், விளைவு, இன்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்குஇவ் ஐந்து (குறள் -738)

நோய் இல்லாமை, செல்வம், விளைச்சல், மகிழ்ச்சி, நல்ல காவல் இவை ஐந்தும் ஒரு நாட்டிற்கு அழகு என்று நூலோர் கூறுவர் என்று இத்திருக்குறளின் வழி பொய்யாமொழி புலவர் கூறியுள்ளார் (சாலமன் பாப்பையா, 2006)[3].

ஈழநாடு செழிப்புடன் காணப்பட்டது எனவும் அங்கு பச்சைப்பசேல் என்ற நிலங்கள் காணப்பட்டது என்றும் கூறப்படுகிறது. அகத்தியரால் அமைக்கப்பட்ட குளமும் இங்கு உள்ளது (கந்தசாமி, 2004)[11].

பாடுவார் பலர் என்னின், மற்று
அவரினும் பலரால் ஆடுவார்கள் (கம்பன் 4859)

இந்தப் பாடலின் வழி கம்பர், இலங்கை வாழ் மக்கள் மகிழ்ச்சியாக ஆடிப்பாடி மகிழ்கின்றனர் என்பதை இங்கு குறிப்பிட்டுள்ளார். ஒரு நாட்டின் பெருமையும் சிறுமையும் அதில் வாழும் மக்கள் பொறுத்தே அமையும். மேலும்,

இழையும், ஆடையும், மலையும் சாந்தமும், ஏந்தி (கம்பன் 4861)

இலங்கை மக்கள் ஒவ்வொருவருக்கும் ஆபரணங்கள் ஆடைகள் மற்றும் மாலைகள் கிடைக்க வேண்டிய ஒரு கட்டாயமாக்கப்பட்டிருந்தது. மக்கள் நிறைந்த செல்வ செழிப்போடு வாழ்ந்ததை நமக்கு இப்பாடல் காட்டுகிறது.

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளர்ந்தரும் நாடு (குறள் 739)

என்கிறார் வள்ளுவ பெருமான். ஒரு சிறந்த நாடு என்பது பிற நாட்டிலிருந்து எந்த ஒரு காரணத்திற்காகவும் பிற நாட்டை நாடாமல் இருக்கும் நாடே என்கிறார் (சாலமன் பாப்பையா, 2006)[3]. ஆகையால், இலங்கையில் வாழ்ந்த மக்கள் இப்படிச் செல்வ செழிப்போடு வாழ்ந்திருக்கையில் கண்டிப்பாக இலங்கை மற்ற நாட்டைச் சார்ந்து இருந்திருக்க வாய்ப்பில்லை என்பதனை நாம் இதன் வழி அறிய முடிகிறது.

தொடர்ந்து ஒரு நாட்டின் வளர்ச்சியை அறிய பெண்களின் நிலையை நாம் ஆராய்ந்து பார்க்கலாம். பெண்களை எண்ணத்தால், சொல்லால், செயலால் இழிவுபடுத்துவது அறிவற்ற செயல் என்றும் அதனைக் கண்டிப்பாக நீக்க வேண்டும் என்றும்

‘மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை யைக்கொ ளுத்துவோம்’
(விடுதலை-3)

இப்படி பாரதியார் குறிப்பிடுகின்றார். மேலும், நாட்டை முன்னேற்ற நினைப்பவர்கள் பெண்களை அடிமைகளாக நடத்தக்கூடாது என்றும் வன்மையாகக் கூறுகிறார் (தமிழ்வு)[10].

கம்பர் பெருமான், இங்கு இலங்கையில் வாழும் பெண்கள் மிகவும் மகிழ்ச்சியாகவும் இசையுடன் வாழ்வதாகச் செப்பியுள்ளார். மனதில் மகிழ்ச்சி பொங்கினால் தான் இசை பிறக்கும். ஆகையால், இலங்கையில் வாழ்ந்த மக்கள் மகிழ்ந்து வாழ்ந்தனர் என்பது இங்குப் புலப்படுகிறது. அதைத்தான்,

தேனிசை மாந்தினர்; செவ்வாய் ஊறல் மாந்தினர் (கம்பர் -4865)

என்கிறார் கம்பர்.

இலங்கை நகர் போலவே அதன் மதில்களும் உயர்ந்து இருந்தது என்பதனை,

கறங்கு காள் புகா,
கதிரவன் ஒளி புகா, மறலி
மறம் புகாது, (கம்பன் - 4857)

இந்தப் பாடலின் வழி கூறுகிறார். சுழன்று வீசும் காற்றுகூட புகாத வண்ணம் அம்மதில்கள் அமைக்கப்பெற்றிருந்ததாகவும், அவை வானுகை தொட்டு நின்றது என்றும் கூறப்படுகிறது. தன் நாட்டை மிகவும் பாதுகாப்பான முறையில் ஆண்டு வந்தான் என்பதை நமக்கு எடுத்துரைக்கிறது. மேலும், இலங்கையில் கட்டப்பட்டிருந்த மாளிகைகள் மற்றும் அதன் கோபுரங்களும் சிறந்த வேலைப்பாடுடன் கட்டப்பட்டிருந்தது எனவும் நமக்குக் கம்பர் புலப்படுத்துகிறார். அவை கலைத்திறனோடு, மரகதம், வைரம் சந்திரகாந்தக்கல்

இழைக்கப்பட்டுச் சிறந்த வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்டவை. சந்திரகாந்தக்கல் இருளிலும் ஒளி வீசும் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது (கந்தசாமி,2004)[11]. இதன்வழி இலங்கை மன்னன் இலங்கேஸ்வரன் நல்ல கலைத்திரம் உள்ளவன் என்பதையும் நாம் அறியமுடிகிறது.

மகர வீணையின் மந்தர
கீதத்து மறைந்த
சகர வேலையின் ஆர்கலி!
திசைமுகம் தழுவும்
சிகர மாளிகைத் தலம் தோறும் (கம்பன் -4848)

**முடிவுரை**

இலங்கை நாட்டின் அரசியல், பொருளாதாரம், மக்களின் மாட்சி, சாதாரண மக்களின் நிலை இவற்றை ஆராய்ந்த பொழுது வறுமையின் சுவட்டைக் காண முடியவில்லை. 'வானளவு வாழ்ந்தாலும், மலையளவு வாழ்ந்தாலும் மனிதரைப் பாடமாட்டோம்' என்று கூறும் நால்வரும், இலங்கேஸ்வரனைப் பற்றிய பாடலைப் பாடியுள்ளனர் (தமிழ்வு)[10]. இதற்கு இன்னும் வலு சேர்ப்பது போல, கம்பர் கொடுத்திருக்கும் பாடல்களும் அதற்குச் சான்று பகர்கின்றன. அந்த நாட்டின் வருணனையைக் கண்டதும் மகிழ்ச்சியே ஏற்படுகிறது.

**மேற்கோள் நூல்கள்:**


1. Nagappan Arumugam. (2008). *Sithantha Saivam [Saiva Siddhanta]*. Kuala Lumpur: Aathi Enterprise.
2. Periyakaruppan. (2009). *Sanga Marabu [Old Tradition]*. Chennai: Parameswari Graphic.
3. Solomon Pappiah. (2006). *Thirukkural [Thirukkural]*. Chennai: Kavitha Publication.
4. Varatharasan. (2010). *Tamizh Ilakkiya Varalaru [History of Tamil Literature]*. Chennai: V.P.K OF Set.
5. Sethu Pillai, Ra.Pi. (2007). *Tamizh Veeram* [*Courageous of Tamizh*]. Chennai: Pazhaniyappa Brothers.
6. Karuthiruman, P., G. (1963). *Kampan.* Chennai: Tamil Puthakalayam.
7. Pulavar Kulanthai. (1946). *Raavana Kaaviyam [Poem of Ravana]*. Chennai: Santiya Patippagam.
8. Sella Paandi, Ra. (2020). *Ravanan Atchiyum Maatchiyum [Rise and Fall of Ravana]*. Kindle Store.
9. Nyanasammanthar, A, Sa. (2018). *Ravanan Atchiyum Maatchiyum [Rise and Fall of Ravana]*. India: Pusataka.
10. Tamilvu http://www.tamilvu.org/ta/library-l3700-html-l3700ind-133880
11. Kanthasaamy Balasubramaniam. (2004). *Ravaneswaran Indira Ula [Ravaneswaran's Mystical Journey]*. Sri Langka: Ilathu Ilakkiya Solai.